# பனித்துளி செய்திகள்!

**“அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!” (சங்கீதம் 33:9)**

**துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!**

(திங்கள்தோறும்)

**02.05.2022**

## 5. நம் காலத்தை ஆண்டவரிடம் தருவதே நலம்!

நட ஒரு காலமும், நட்டதை அறுவடை செய்திட ஒரு காலமும் உண்டு! (பிர.3:2). இந்த இரண்டாவது “அறுவடை” மகிழ்ச்சியின் காலத்திற்கு இடையில் சில மாதங்கள் நடைபெறும் களை எடுப்பு, நீர்ப்பாய்ச்சுதல் போன்ற பண்படுத்தும் செயல் நடைபெறும் என நாம் அறிவோம். அதுபோலவே அழ ஒரு காலம், புலம்ப ஒருகாலம் முடிந்த பிறகு நகைப்பதற்கும், மகிழ்ந்து ஆர்ப்பரிப்பதற்கும் காலம் வருமென 4-ம் வசனம் கூறுகிறது. **துன்பத்திற்குப் பிறகு மகிழ்ச்சியின் ஆர்ப்பரிப்பு** வருவதற்கு முன்பாக, நம் உள்ளத்தை பண்படுத்தும் செயலாக நாம் நொறுங்குண்டு தேவனை கிட்டிச்சேர்வதும், ஜெபிப்பதும், விசுவாசிப்பதும், பொறுமையாய் காத்திருப்பதுமான தேவனுடைய செயல் நடைபெற்றால் மாத்திரமே “மகிழ்ச்சி நிறைந்த ஆர்ப்பரிப்பின் காலத்தை” நாம் சுதந்தரித்திட முடியும்! ஆம், **‘அதினதின் காலத்திலே’ சகலத்தையும் தேவன் நேர்த்தியாய் செய்து முடிப்பார்** என விசுவாசித்து, அவர் கிரியை செய்யும்படி, ‘நம் காலத்தை’ அவரிடம் தருவோமாக! (பிர.3:1,11).

**– ரத்னம்**